# பொதுக்காலத்தின் 4 ஆம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு C

**இன்றைய வாசகங்கள்:**

எரேமியா நூலிலிருந்து வாசகம் 1:4-5, 17-19,

திருப்பாடல்கள் 71:1-6, 15-17,

கொரிந்தியருக்கு எழுதிய முதலாம்

நிருபத்திலிருந்து வாசகம் 12:31 - 13:13,

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 4:21-30

## திருப்பலி முன்னுரை:

இறை அன்பில் நிறைந்தவர்களாய் ஆண்டவரின் நாளான ஆண்டின் பொதுக்காலம் 4 ஆம் வாரத் திருப்பலி வழிபாட்டில் பங்கேற்க வந்திருக்கும் இறை மக்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்தைக் கூறி மகிழ்கிறேன். இறைவனுடைய வார்த்தையின் மட்டில் நாம் கொண்டிருக்கவேண்டிய மதிப்பையும், மாண்பையும், மன நிலைலையும் பற்றிய தெளிவான சிந்தனைகள் இன்றைய இறைவார்த்தைகள் வழியாக நமக்குக் கிடைக்கின்றன.

இறைவனுடைய வார்த்தைகள் ஞானமும் அறிவும் நிறைந்தவை , இறைவார்த்தையே நம்மை இயக்கும் சக்தி. அதுவே நமது காலடிக்கு விளக்கும், நம் பாதைக்கு வெளிச்சமுமாகும். அத்தோடு நாம் இறைவார்த்தையின்படி வாழ்வதன் வழியாக இறைவனை ஆழமாக அறிய முடியும் என்னும் உண்மைகள் இன்று நமக்குச் செய்தியாகத் தரப்படுகின்றன. எனவே இன்று நாம் நம்மையே தாழ்த்திக்கொண்டு, ஒவ்வொரு நாளும் இறைவன் நமக்குச் செய்த, செய்துவரும் அனைத்து நன்மைகளையும் நினைந்து: “ஆண்டவரே! என் முழுமனத்துடன் உமக்கு நன்றி செலுத்துவேன்: நான் மன்றாடிய நாளில் எனக்குச் செவிசாய்த்தீர்: என் மனத்திற்கு வலிமை அளித்தீர்.” என்னும் நன்றியுணர்வோடு தொடரும் பலியில் பங்கேற்போம்.

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**என்றும் மாறாத மிகுந்த இரக்கமுள்ள இறைவனே!**

திருஅவையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், இருபால் துறவிகள், பொதுநிலையினர் அனைவரும் கடவுளால் அன்பு செய்யப்படுபவர்களாகவும், நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து வாழ்ந்தலே, அது கிறிஸ்துவின் உடலாக மாறிவிடும் என்பதை உணர்ந்தவர்களாக வாழ வரங்கள் வழங்கிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**மகிழ்ச்சியின் ஊற்றே இறைவா,**

உலக மக்கள் அனைவரும் இறைவார்த்தையைக் கேட்டு மனம் வருந்தவும், உம்மைப் பற்றிய உண்மைகளைப் புரிந்துகொண்டு மீட்பின் மகிழ்ச்சியை அனுபவிக்கவும் தேவையான உதவிகளை வழங்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**எம்மை கைப் பிடித்து நடத்தும் தந்தையே! எம் இறைவா!**

எங்கள் குடும்பங்கள் இயேசுவின் மறைஉடலில் இணைந்திருக்கவும், ஒருவரை ஒருவர் அன்பிலும், செபத்திலும் தாங்கிக் கொள்ளவும், துன்பங்களில் ஆறுதலாக இருக்கவும், மகிழ்ச்சிப் பெருமையோடு பகிர்ந்துக் கொள்ளவும், குடும்பங்களில் உமதருள் நிறைந்திருக்கவும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**விடுதலையின் நிறைவே இறைவா,**

பலவிதமான உடல், உள்ள, ஆன்ம நோய்களால் வருந்தும் மக்களை கனிவுடன் கண்ணோக்கி, அவர்களுக்குத் தேவையான நற்சுகமும், புதுவாழ்வும் அளித்து பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

உலகப் பொருட்கள் மீதும், செல்வத்தின் மீதும் நாட்டம் கொள்ளும் எமது தீய நாட்டங்களிலிருந்து நாம் விடுதலை பெற்று, இறையரசையும், உமக்கு ஏற்புடையதையும் நாம் நாடித் தேட அருள் கூர்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எமக்கு மன்னிப்பு அளித்து எமக்கு புதுவாழ்வை வாக்களித்த தந்தையே இறைவா!**

எம் இளைய சமுதாயம் தனது வாலிப நாட்களில் நீர் தரும் நலன்களை கண்டுக் கொண்டு அதனை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள தூயஆவியானவரின் அருங்கொடைகளை அபரிமிதமாகப் பொழிந்தருளவேண்டும் என்ற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.